**சிலாபம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

----------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சிலாபம் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் முதலீட்டு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் தவறினால் நாட்குறிப்பின் மூலம் 2014 ஆம் ஆண்டின் முதலீட்டு வட்டி நீக்கப்பட்டமையால் முதலீட்டுக் கணக்கு மற்றும் திரண்ட நிதியக் கணக்கு என்பன ரூபா 228,322 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 634,050 பெறுமதியான இரண்டு இயந்திர உபகரணங்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையால் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் இயந்திர உபகரணக் கணக்கிலும் அப்பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 252,850 பெறுமதியான உபகரணங்கள் நாட்குறிப்பு பதிவின் மூலம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மீண்டும் அது இன்னுமொரு நாட்குறிப்பின் மூலம் ரூபா 224,150 ஆக கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 08 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்குமிடையே ரூபா 15,318,820 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்குரிய நிரந்தர சம்பள மீளளிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து ரூபா 5,776,723 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய 03 வேலைகளுக்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து ரூபா 551,227 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கு முன்னரும், 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டிலிருந்தும் அறவிடப்படாதது காணப்பட்ட ஊழியர் கடன் ரூபா 352,077 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 4,763,700 தொகையான 50 கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை மற்றும் உரிய விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 146,934,195 கூட்டுத் தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| (i) 59 ஆம் இலக்க விதி | ஒவ்வொரு வருட ஆரம்பத்தின் போதும் சபை அதிகாரப் பிரதேசத்தில் மெய்மையாய்வை நடாத்தி கைத்தொழில்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 218 ஆம் இலக்க விதி | சபையின் சகல காணி மற்றும் கட்டிடங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | காக்காய்பள்ளி உப அலுவலகத்திற்குரிய 10 கடைகள் மற்றும் தபால் அலுவலகம் அமைந்துள்ள அறைகளுக்காக அறவிடப்பட்ட வாடகை 2000 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பாக சுற்றறிக்கையில் குறிப்பிட்ட பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது ஐந்து நாட்குறிப்புக்களின் மூலம் கணக்கு மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் மீதியை சமப்படுத்துவதற்காக நிலுவையாக இருந்த வருமானம் ரூபா 1,096,335 தொகை முறையான அங்கீகாரமின்றி திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,149,812 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,250,727 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 1,899,085 இனால் அதிகரித்ததற்காக நான்கு வருமான விடயங்கள் ரூபா 7,211,263 இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட வேண்டிய ஆதன வரி மற்றும் வரி வருமானங்களில் 32 சதவீதம், ஏக்கர் வரி வருமானத்தால் 75 சதவீதம் மற்றும் வாடகை வருமானத்தில் 11 சதவீதம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது சபைக்குச் சொந்தமான 34 வாடகை ஆதனங்களிலிருந்து வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் ஆகக்குறைந்த கேள்விப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 892,216 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் இறைச்சிக் கடை வாடகை ரூபா 488,434 நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 416,397 தொகை 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிற்குரியதாகவும் அறவிட வேண்டியிருந்த வாடகையாகும்.

#### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 33,851,207 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 16,671,661 தொகை 2009 – 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியதாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் பிரதம செயலாளரிடமிருந்து அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 86,592,284 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 57,592,284 தொகை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரியதாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 5,950,000 தொகையான 31 வேலைகள் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணிகளில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 07 றூட், 21.43 பேர்ச் அளவான மொத்தக் காணியின் 05 கூறுகளுக்குரிய உரித்துறுதியை சபைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிட திட்டங்களை அங்கீகரிக்கும் போது அறவிடப்பட்ட ரூபா 648,968 தொகையான தண்டப்பணம் கட்டிட அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் சேமிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பணத்தை அதிக நலன்களைப் பெறுகின்ற முதலீடுகளில் ஈடுபடுத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணினர் எண்ணிக்கையின் பிரகாரம் இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்கள் என்ற இரண்டிலும் மொத்தமாக 10 பேர் மிகையாக இருந்தனர்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சி 225 சதவீதத்தால் மூலதனச் செலவினம் உயர்ந்து சென்றிருந்ததுடன், ஆதனவரி, வாடகை வருமானம், ஏனைய வருமானம் என்பன முறையே 12.4 சதவீதம், 19.2 சதவீதம் மற்றும் 13.7 சதவீதம் எனக் குறைவடைந்திருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஆண்டில் 08 அறிக்கைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கடன் கொடுத்தோர் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 02 வருட காலத்தை விஞ்சியிருந்த கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) வருமானத்தை சேகரித்தல் | பல்வேறு வழிகளிலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் வாடகைக்கு வழங்கக்கூடிய 34 ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) ஊழியர் கடன் | நிலுவையாகக் காணப்பட்ட ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |